<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கும்பகோணம்</u>

<u>மதிப்பு சீட்டு</u>

<u>அசல் வழக்கு எண்.204/2023</u>

1. K. கோவிந்தராஜன்
2. K. ஐயப்பன் ...வாதிகள்

/எதிர்/

1. P. ரவிச்சந்திரன்
2. P. ரமேஷ் ....பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| 1. வழக்கின் கோரிக்கை/தன்மை | – | நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் |
| 2. சட்டப்பிரிவு மற்றும் உட்பிரிவு | – | U/s. 27(C) |
| 3. வழக்கின் மதிப்பு | – | ரூ.1,000/– |
| 4. கிஸ்தி வாடகை | – | – |
| 5. நீதிமன்ற முத்திரை கட்டணம் | – | ரூ.30/– |

/ஆணைப்படி/

தலைமை எழுத்தர்,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
கும்பகோணம்.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கும்பகோணம்.
முன்னிலை – திருமதி. V. ரஞ்சிதா, பி.எஸ்ஸி., எல்.எல்.பி.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கும்பகோணம்.
2024 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 18–ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவராண்டு 2055 – குரோதி வருடம் – ஆனி திங்கள் 04–ம் நாள்
அசல் வழக்கு எண்.204/2023
CNR NO– TNTJ1B0002962023

1. K. கோவிந்தராஜன், வயது 60, த/பெ. கலியபெருமாள், முகவரி கீழத்தெரு, கடமங்குடி கிராமம், குடவாசல் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம், நன்னிலம்.
2. K. ஐயப்பன், வயது 57, த/பெ. கலியபெருமாள், முகவரி கீழத்தெரு, கடமங்குடி கிராமம், குடவாசல் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம், நன்னிலம்.
...வாதிகள்

/எதிர்/

1. P. ரவிச்சந்திரன், வயது 55, த/பெ. பொன்னையாபிள்ளை, முகவரி நெ.6/113, வடக்கு வீதி, நாச்சியார்கோவில், கும்பகோணம் தாலுக்கா.
2. P. ரமேஷ், வயது 52, த/பெ. பொன்னையாபிள்ளை, முகவரி நெ.6/113, வடக்கு வீதி, நாச்சியார்கோவில், கும்பகோணம் தாலுக்கா.
....பிரதிவாதிகள்

பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ அல்லது அவர்கள் மூலம் உரிமை கோரும் வேறு எவருமோ வாதிகளுடைய அமைதியான அனுபோகத்திலும், சுவாதீனத்திலும் உள்ள தாவா சொத்தில் சட்டத்திற்கு புறம்பாக எவ்வித இடையூறும் செய்ய கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் செலவு தொகை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு முன்னிடப்பட்ட நாள் | – | 11.08.2023 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | – | 11.08.2023 |
| வழக்கு மேடோவர் செய்யப்பட்ட நாள் | – | 11.08.2023 |
| வழக்கு மூலம் | – | 30.10.2022, 08.08.2023 |
| வழக்கு மூலம் ஏற்பட்ட இடம் | – | நாச்சியார்கோவில்,<br>கும்பகோணம் தாலுக்கா |
| வழக்கு பொறுமானம் | – | ரூ.1,000/– |

தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டப்பிரிவு 27(சி)–ன்படி நீதிமன்ற கட்டணம் ரூ.30/–க்கு செலுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு முதன்முதலில் கும்பகோணம், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 11.08.2023–அன்று கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் தஞ்சாவூர், முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவு எண்.R6019 நாள்:11.07.2019–ன்படி இந்நீதிமன்றத்திற்கு மேடோவர் செய்யப்பட்டு, கடந்த 05.06.2024–ஆம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வரப்பெற்று, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ரஞ்சித்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. பழனிவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், பிரதிவாதி தரப்பு ஒருநிலையாக்கப்பட்டு இன்று (18.06.2024) இந்நீதிமன்றம் பிறப்பித்த...

## தீர்ப்பாணை

1. தாவா சொத்தில் கடை நடத்தி வரும் வாதிகளை சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ முகவர்களோ அல்லது அவர்கள் மூலம் உரிமை கோரும் நபர்களோ இடையூறு செய்ய கூடாது என உத்தரவிடப்படுகிறது.
2. செலவு தொகை இல்லை.

## சொத்து விபரம்

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், நாச்சியார்கோவில் கிராமம், வடக்கு வீதியில் கதவு எண்.6/113/1, மின் இணைப்பு எண்.064860302 உள்ள ஆர்.சி.சி. ஓட்டு கட்டிட கடை ஒன்று. நான்கெல்லை விபரம் வடக்கில் வாதிகள் வீடு, கிழக்கில் பாப்பாத்தி அம்மாள் திருமண மண்டபம், மேற்கில் சுந்தரி முத்து வீடு, தெற்கில் மெயின்ரோடு இதற்குள்பட்டது.

**<u>வாதிகள் தரப்பில் செலவு தொகை பட்டியல்</u>**

| | ரூ.பை |
|---|---|
| நீதிமன்ற கட்டணம் | 30 |
| வக்காலத்து | 10 |
| படி செலவு | 100 |
| வழக்குரை தயார் செலவு | 200 |
| ஜுனியர் வழக்கறிஞர் கட்டணம் | 12 |
| சீனியர் வழக்கறிஞர் கட்டணம் | 750 |
| மொத்தம் | 1,102 |

2024–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 18–ஆம் நாள் எனது கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இட்டு வழங்கப்பட்டது.

(ஒம்/–) வி. ரஞ்சிதா
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கும்பகோணம்.

**தீர்ப்பாணை**
அ.வ.எண்.204/2023
18.06.2024